Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 231

வெள்ளிக்கிழமை
15 ஜூலை 2022

ஆனி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## வருகின்றன எரிபொருள் கப்பல்கள்

கொழும்பு, ஜூலை 15
மூன்று டீசல் தாங்கிக் கப்பல்களும், பெற்றோல் தாங்கிக் கப்பல் ஒன்றும் எதிர்வரும் 17ஆம் திகதி இலங்கைக்கு 11 ▶



கோத்தாபய ராஜபக்ச பதவி விலகல் கடிதத்தை சபாநாயகரிடம் கைளித்துள்ளார் என்ற தகவல் வெளியானதும், நேற்றிரவு காலி முகத்திடல் போராட்டத்தில் இருந்தவர்கள் வெடி வெடித்துக் கொண்டாடினர். கைபேசி வெளிச்சங்களை ஒளிரச் செய்து மகிழ்ச்சியைப் பறிமாரிக் கொண்டனர். (எ-இ)

## தம்மிக்கவிடம் பொறுப்புகளை பறித்த ரணில்

கொழும்பு, ஜூலை 15
பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க அவசர அவசரமாகச் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அமைச்சர் தம்மிக்க பெரோவின் பொறுப்பில் உள்ள 11 ▶

## புதிய பிரதமர்; ரணிலுக்கு "செக்" ?

கொழும்பு, ஜூன் 15
புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகருக்கு 11 ▶



## தப்பியோடிய கோத்தா தற்போது சிங்கப்பூரில்

கொழும்பு, ஜூலை 15
இலங்கையில் இருந்து தப்பித்துச் சென்று மாலைதீவில் தங்கியிருந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நேற்று மாலை அங்கிருந்து புறப்பட்டுச்சிங்கப்பூரைச் சென்றடைந்துள்ளார். சிங்கப்பூர் 11 ▶

### பெரும் இழுபறிக்குப் பின்னர்

# பதவி விலகினார் கோத்தா!

## மின்னஞ்சலில் வந்தது கடிதம் மூலப்பிரதிக்கு சபாநாயகர் காத்திருப்பு

**கொழும்பு, ஜூலை 15**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகல் கடிதம் நேற்று இரவு 7 மணியளவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலம் கிடைத்த பதவி விலகல் கடிதத்தின் சட்டபூர்வத் தன்மை தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆராயப்படுகின்றது என்று சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.** 11 ▶

## பொருளாதார உதவியே இந்தியாவின் எண்ணம்!

### ஜெய்சங்கர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15
இலங்கையின் நிலைவரம் உணர்வுபூர்வமானதாகக் காணப்படுகின்றது. இந்தத் தருணத்தில் இந்தியா இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவுவது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றது என்று 11 ▶

## வன்முறையைத் தூண்டினால் இராணுவ அதிகாரம் பாயும்!

### சிறிலங்கா இராணுவம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15
அரசாங்கச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலும், வன்முறையைத் தூண்டும் வகையிலும் எவரும் செயற்பட முடியாது. அவ்வாறு செயற்படுவோர் மீது இராணுவ அதிகாரம் பிர 11 ▶



## ரயிலுடன் மோதி ஒருவர் சாவு!

### கந்தர்மடத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் நேற்று நடந்த ரயில் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த 55 வயதான ஒருவரே உயிரிழந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 11 ▶

## நாடாளுமன்ற அமர்வு இன்று நடைபெறாது!

கொழும்பு, ஜூலை 15
நாடாளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை கூடும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகல் தாமதித்த 11 ▶

# கோத்தாவை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துக!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 15
இன அழிப்புக்குக் காரணமான கோத்தாபய ராஜபக்சவுக்கு எந்த ஒரு நாடும் அடைக்கலம் கொடுக்கக் கூடாது. கோத்தாபய ராஜபக்சவை போர்க்குற்றவாளியாக அறிவித்து, கைது செய்து சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 11 ▶

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# அதிகாரப்பீடங்கள் கையளிக்கப்பட்டன

## போராட்டக்காரர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 15**

**ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், அலரி மாளிகை உள்ளிட்ட தம்வசமுள்ள அதிகாரப்பீடங்களை காலிமுகத்திடல் போராட்டாக்காரர்கள் மீளக் கையளித்துள்ளனர்.**

நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 9 ஆம் திகதி நடத்தப்பட்ட பெரும் போராட்டங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட கட்டடங்கள் போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டன. அதன்பின்னர் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களை அடுத்து பிரதமரின் அலுவலகமும் போராட்டக்காரர்களின் வசமானமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நேற்றுக்காலைவரை மாலைதீவில் கோத்தா

## சிங்கப்பூருக்கு செல்ல முடியவில்லை

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நேற்றுக்காலை வரை மாலைதீவிலேயே தங்கியிருந்தார் என்றும் அவரால் திட்டமிட்டபடி சிங்கப்பூருக்குச் செல்லமுடியவில்லை என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கையில் இருந்து மாலைதீவுக்கு விமானத்தில் சென்றடைந்தார். அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்று பின்னர் தான் திட்டமிட்ட பகுதியைச் சென்றடைவதுதான் அவரின் நோக்கமாக உள்ளது. இதன் பின்னரே அவர் தனது பதவி விலகல் கடிதத்தை மூன்றாம் தரப்பின் ஊடாக சபாநாயகருக்குக் கையளிக்கவுள்ளார். இந்த நிலையில், அவரால் நேற்றுமுன்தினம் மாலை அல்லது பின்னிரவில் திட்டமிட்டபடி சிங்கப்பூருக்குச் செல்லமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரின் பயணம் பிற்போடப்பட்டுள்ளது. (ம)

# சிப்பாயின் ரி - 56 ரகத் துப்பாக்கி போராட்டக்காரர்களால் அபகரிப்பு

கொழும்பு, ஜூலை 15

நாடாளுமன்றின் அருகே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவத்தினரின் இரண்டு துப்பாக்கிகள் போராட்டக்காரர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது 60 தோட்டாக்களுடன் கூடிய ரி- 56 ரக வகையைச் சேர்ந்த துப்பாக்கிகளே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன.

பத்தரமுல்லை, பொல்துவவில் அருகே போராட்டக்காரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் காயமடைந்த இராணுவச் சிப்பாய்களிடமிருந்து துப்பாக்கிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# 40,000 தொன் அடங்கிய டீசல் கப்பல் இன்று வருகை

கொழும்பு, ஜூலை 15

40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் அடங்கிய கப்பல் ஒன்று இன்று நாட்டை வந்தடையவுள்ளது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கான முழுப் பணமும் செலுத்தப்பட்டுள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 22 ஆம் 24 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வரவுள்ள எரிபொருள் கப்பலுக்கான முழுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# மாலைதீவின் தென்பகுதியில் ஆடம்பர விடுதியில் கோத்தா

## ஓர் இரவுக்கு 18 லட்சம் ரூபா பணத்தையும் வாரியிறைத்தார்

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மாலைதீவுக்குத் தப்பிச்சென்றுள்ள நிலையில், அவர் மாலைதீவின் தென்பகுதியில் உள்ள ஆடம்பர விடுதியில் தங்கியிருக்கின்றார் என்றும் அதற்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டுள்ளார் என்றும் இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் ரூபாவில் ஓர் இரவுக்கு சுமார் 18 லட்சம் ரூபா பணத்தையும் கோத்தாபய ராஜபக்ச விடுதிக் கட்டணமாகச் செலுத்தியுள்ளார். அதேநேரம், மாலைதீவை விட்டு வெளியேறுவதற்காக மாலைதீவு அரசாங்கத்திடம் தனியார் ஜெட் விமானமொன்றையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கோரியுள்ளார் என்றும் அந்த ஊடகம் நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டது. (ம)

## சிறிலங்காவின் அதிகாரமாற்றங்களில் சிக்குண்டு

# தமிழர்களின் அபிலாஷைகளை நீர்த்துப்போகச் செய்யாதீர்கள்!

## தமிழ்த் தேசியக் கட்சிகளை வலியுறுத்துகின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா

கொழும்பு, ஜூலை 15

நாளையே ஒரு புதிய ஜனாதிபதியோ பிரதமரோ தெரிவு செய்யப்பட்டாலும் இந்த நாட்டின் இனங்களுக்கிடையிலான நிரந்தர அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டப்போவதில்லை. அது அவ்வளவு எளிதில் சாத்தியமாகக் கூடியதுமல்ல. எனவே தான் தமிழ்த் தேசியத்தின் வலி மிகுந்த எதிர்பார்ப்பை நீர்த்துப்போகச் செய்யும் அற்பத்தனமான செயல்களில் தமிழ் தரப்பு ஈடுபடுவதில் இருந்து விலக வேண்டும் என்று தெரிவித்தார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா.

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் அரசியல் வரலாறு, மக்களால் முதன்முறையாக மாற்றி எழுதப்படும் அளவுக்கான ஒரு புரட்சியை சுமந்துகொண்டிருக்கின்றது. எமது நாடு என்ற ரீதியில் இங்கு அரசியல் ரீதியில் ஓர் ஆட்சி மாற்றம் நிகழ்வதில் எமக்கு ஆட்சேபனை கிடையாது. மக்களின் இயல்பு வாழ்வை சாதாரணமான நிலையில் மீளவும் தூக்கி நிறுத்த அரசியல் மாற்றம்தான் அவசியம் என்ற நிலையில் மக்கள் போராட்டக்களமாக வீதிகளை மாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் இந்நாட்டில் அரசியல் ரீதியில் என்ன மாதிரிதியான முடிவொன்றுக்குச் செல்வது என்ற நிலையில் அரசியல் கட்சிகள் தடுமாறிக் கொண்டிருப்பதையும், பதவிக் கதிரைக்கான போட்டியும் ஆசையும் தலைமைத்துவங்களுக்குள் அதிகரித்திருப்பதையும் நாம் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது.

அதேநேரம், தமிழர் தரப்பு தமது மக்களை மறந்துவிட்டு நாட்டில் வீசுகின்ற புரட்சிநிலையை[illegible] நிலைநிறுத்திக்கொள்ள அவசரப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகள் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான தருணம் இது. காரணம் நிதானத்தை ஆசைகள் கவ்வி விட தமது மக்களின் உரிமைசார்ந்த எதிர்பார்ப்பையும் இருப்பையும் காவு கொடுத்துவிடக் கூடியளவுக்கு எமது அரசியல் பிரதிநிதிகள் சிலர் செயற்படுவது மிகவும் கவலையளிக்கின்றது.

போராட்டக்காரர்கள் இந்த நாட்டின் பொருளாதார இறுக்க நிலையால் விளைந்த இயல்புவாழ்வின் நெருக்கடியில் இருந்தே அரசியல் மாற்றத்தைக் கோரி களத்துக்கு வந்தார்கள். பசளையும், மண்ணெண்ணெயும், பெற்றோலும் டீசலும் சமையல்வாயுவும் தடையில்லாமல் மக்களுக்குக் கிடைத்திருந்தால் இப்படியாகு மக்கள் போராட்டம் வெடித்திருக்க வாய்ப்புமில்லை அரசியல் மாற்றம் கோரிய மக்கள் குரல் வீதிக்கு கோஷமாக வந்துமிராது. எனவேதான் ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அரசியல் முடிவுகளை நோக்கி தமிழர் பிரதிநிகள் செயற்படவேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியல் இலாபம் அடைய முனையும் குறுகிய புத்தி தமிழர் தேசியப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுகளையும் பெற்றுத் தரப்போவதில்லை. தனிப்பட்ட ரீதியில் அரசியல்வாதிகள் போராட்டக்களச் செயற்பாட்டாளர்களுக்கு தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவது வேறு. தமிழ்த் தேசியத்தின் பெயரால் ஆதரவு நல்குவது வேறு. தமிழ்த் தேசியத்தின் நீண்ட கால அபிலாஷைகளை மலினமடையச் செய்யும் செயற்பாடுகளில் தமிழ்ப் பிரதிநிகள் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதை வன்மையாகக் கண்டிப்பதில் அர்த்தம் இருக்கின்றது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோத்தாவை கைது செய்ய சர்வதேசப் பிடியாணை

## பிரிட்டனைக் கோருகின்றார் லிபரல் டெமோக்ரெட் தலைவர்

**கொழும்பு, ஜூலை 15**

**ஜனாதிபதி கோத்தாபயவைக் கைதுசெய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்கவேண்டும் என்று பிரிட்டனின் லிபரல் டெமோக்ரெட் கட்சியின் தலைவர் எட் டேவி வலியுறுத்தியுள்ளார்.**



பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ச அரசின் ஊழல், வரிக் குறைப்பு, பாதுகாப்புச் செலவினங்கள், கொடூரமான அதிகாரங்கள் போன்றவற்றால் இலங்கையில் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கை மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதார மற்றும் அரசியல் தீர்வுப் பொதி ஒன்றை பிரிட்டன் விடுவிக்கவேண்டும். தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் உட்பட நாட்டில் உள்ள அனைவரின் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக பிரிட்டன் முன்வைக்கும் தீர்வு இருக்க வேண்டும் - என்றார். (ம)

## பதவி ஆசையால்

# கோத்தாபயவை பாதுகாப்பாக வெளியேற்றியவர் ரணில்தான்!

## கொழும்பு ஊடகங்கள் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 15

ஜூலை 12 ஆம் திகதிவரை நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு கோத்தாபய எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், 'நாட்டில் இருந்து பாதுகாப்பாக வெளியேறாமல் பதவி விலகமாட்டேன்' என்று கோத்தாபய அறிவித்ததை அடுத்து, அவரைப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ரணிலே உதவி செய்துள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜூலை மாதம் 9 ஆம் திகதி நாடெங்கிலும் குறிப்பாக காலிமுகத்திடலில் வெடித்த போராட்டங்களை அடுத்து, பதவி விலகும் முடிவை எடுத்தார் கோத்தாபய. நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் பதவி விலகலை அறிவிக்க அவர் திட்டமிட்டார். இதற்காக ஜூலை 9 ஆம் திகதிக்கும் ஜூலை 12 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாள்களில் சுமார் 50 மணிநேரம் அவர் தலைமறைவாக இருந்தார். இதன் பின்னரேயே, பதவி விலகிவிட்டு நாட்டைவிட்டு வெளியேறுவது தனக்குப் பாதுகாப்பு இல்லை என்பதால், பாதுகாப்பாக வெளியேறிய பின்னர் பதவி விலகுவதற்கு கோத்தாபய தீர்மானித்தார். இதையடுத்தே கோத்தாபய மாலைதீவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டது.

**நெருக்கமானவர்களை மட்டுமே இறுதி நேரத்தில் நம்பினாராம்**

நாட்டை விட்டு கோத்தாபய தப்பிச் சென்ற விமானத்தை, விமானப் படைத் தளபதி (கோத்தாபயவுக்கு மிக நெருக்கமானவர்) எயர் மார்ஷல் சுதர்ஷன பத்திரவின் கட்டளைக்கு அமைய, குறூப் கெப்டன் வெலகெதர, விங் கொமாண்டர் மல்லவ ஆரச்சி ஆகிய விமானிகள் செலுத்தினார்கள்.

ஜனாதிபதி 9 ஆம் திகதி ஜனாதிபதி [illegible] பின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு அழுத்தம் வழங்கப்பட்டது. எனினும், பொலிஸ் உயர் அதிகாரிகள் அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தவேண்டாம் என்று வலியுறுத்தினர்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்கு ஜனாதிபதியை சந்திக்க செல்லும்போது, அவருக்கு மிக விசுவாசமான பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்னவும் உடன் சென்றுள்ளார்.

இதன்போது நடந்த கலந்துரையாடலில், ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவர் எனவும் கண்ணீர்ப்புகை மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியேனும் அதனை அவர்கள் செய்வர் எனவும் ஜனாதிபதி நம்பிக்கையுடன் இருந்துள்ளார்.

எனினும் நிலைமை கைமீறியதை அடுத்தே தரைப்படையை நம்பாமல், தனது பாதுகாப்புக்குக் கடற்படையை நம்பியுள்ளார் கோத்தாபய. நாட்டை விட்டுத் தப்பும் முயற்சிகளை கடற்படைத் தளபதிகளுடனும் இணைந்தே அவர் ஆலோசித்துள்ளார்.

ஜூலை 9 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையே ஜனாதிபதி மாளிகையின் முன்பாக உள்ள மணிக்கூட்டு கோபுரத்தை அண்மித்த பிரதான வாயில் திசையிலிருந்து தொடர்ச்சியாக கண்ணீர்ப்புகைப் பிரயோகம் பாதுகாப்பு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஜனாதிபதி கோத்தாபய கடற்படை தளபதியின் காரில் தப்பிச்சென்று, கடற்படைத் தளபதியின் உத்தியோக பூர்வ தங்கு விடுதிக்கு (ஜனாதிபதி மாளிகையை ஒட்டியதாக கடற்படை தலைமையகத்தில் உள்ளது) சென்றுள்ளார்.

**[illegible]லில் ஓட்டம்**

கடற்படை தளபதியின் உத்தியோக பூர்வ அறையிலிருந்து, கடற்படை தலைமையகமான கோட்டை ரங்கள முகாமிலிருந்து சிதுரல, கஜபாகு ஆகிய கப்பல்கள் திருகோணமலையை நோக்கி பயணத்தை ஆரம்பித்த நிலையில், அதில்-ஜனாதிபதி கோத்தாபய திருகோணமலையின் கடற்படை பொறுப்பிலுள்ள தீவு நோக்கிச் சென்றுள்ளார். இதன்போது ஜனாதிபதி கப்பலுக்குள் இருக்க, ஜனாதிபதி மாளிகையின் முக்கிய அதிகாரிகள் ஜனாதிபதியின் பல ஆவணங்கள், பொருள்களுடன் துறைமுகம் ஊடாக குறித்த கப்பலில் ஏறியுள்ளனர். அந்தக் காணொலிகளே சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருந்தன.

**டுபாய் செல்லும் முயற்சி தோல்வி**

இந்த நிலையிலேயே ஜூலை 10 ஆம் திகதி கோத்தாபய டுபாய் நோக்கி பயணிக்க இரு முறை எத்தனித்துள்ளார். அப்போது கடமையிலிருந்த குடிவரவு அதிகாரிகள், அவரை பொது மக்களோடு வரிசையில் வந்து முறைப்படி விமானத்தில் செல்லமுடியும் என அறிவித்த நிலையில், பொதுமக்கள் முன் தோன்ற அவருக்கு இருந்த அச்சத்தால் அவரால் அப்போது வெளிநாடு செல்ல முடியாமல் போயுள்ளது.

**மாலைதீவுக்கு தப்பிய கதை**

இவ்வாறான நிலையிலேயே, கட்டுநாயக்க விமான நிலையத்தை ஒட்டியதாக அமைந்துள்ள விமானப்படை தளத்தில் தனது மனைவி அயோமா ராஜபக்ச மற்றும் இரு பிரதான பாதுகாப்பு அதிகாரிகளுடன் தங்கியிருந்த கோத்தாபய, மாலைதீவு நோக்கி இரகசியமாக புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய தகவல்கள் பிரகாரம், என்டனோ 32 விமானம் மாலைதீவு நோக்கி செல்ல முன்னர், விமானம் அருகே சென்றுள்ள குடிவரவு குடியகல்வு அதிகாரிகள், சுங்க அதிகாரிகள், ஆவணங்களை சரிபார்த்து உறுதிப்படுத்தியுள்ளனர். (ம-இ)

# தனியார் வழித்தட சேவைக்கு டீசல் வழங்காது பாரபட்சம்

## நேற்றுமுதல் சேவை முடக்கம்

## பரு.தனியார் பேருந்து சங்கம் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜூலை 15

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவால் கடந்த ஐந்து நாள்களுக்கு மேலாக தனியார் பேருந்துகளுக்கு டீசல் வழங்கப்படாத நிலையில் முல்லைத்தீவு சாலையிலிருந்து வந்த பேருந்து ஒன்றுக்கு சுமார் 6 கொள்கலன்களில் டீசல் வழங்கப்பட்டுள்ளது எனத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

தனியார் போக்குவரத்து சேவைக்கு அந்தந்த சாலைகளிலிருந்து டீசல் வழங்கும் நடைமுறை உள்ளபோதும் பருத்தித்துறை சாலை முகாமையாளரால் எமக்கு கடந்த ஐந்து நாள்களாக டீசல் வழங்கப்படவில்லை.

இதனால் நேற்றுக் காலை முதல் பருத்தித்துறை - யாழ்பாணம், பருத்தித்துறை- கொடிகாமம் சேவைகள் முற்றிலும் முடங்கியுள்ளன.

தற்போது பருத்தித்துறைசாலை முன்பாக தனியார் பேருந்துகளுடன் உரிமையாளர்கள், நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் காத்திருக்கின்றனர். இதனால் எம்முடைய அன்றாட வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு சாலையிலிருந்து வந்த பேருந்து ஒன்று சுமார் ஆறு கொள்கலன்களில் டீசலை ஏற்றிச் சென்றுள்ளது. இதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம் - என்றுள்ளது.

இதுதொடர்பில் பருத்தித்துறை சாலை முகாமையாளர் ஜீவானந்தம் தெரிவிக்கையில்,

இந்தக் குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கின்றேன். பதினோராம் திகதி எமக்கான ஒரு தொகுதி டீசல் கிடைக்கப்பெற்றது. குறித்த டீசலில் 55 தனியார் பேருந்துகளுக்குரிய விநியோகம் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது. ஆகவே இவர்கள் ஐந்து நாள்களாக டீசல் வழங்கவில்லை என்பது பொய்க்குற்றச்சாட்டாகும்.

மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இ.போ.ச.சாலைகளில் இருக்கக்கூடிய பேருந்துகளுக்கும் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை சாலைகளில் சுழற்சி முறையில் 2 ஆயிரம் லீற்றர் டீசலை விநியோகிக்குமாறு எமக்குப் பணிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே டீசல் விநியோகம் முல்லைத்தீவு இ.போ.ச. சாலைக்கு வழங்கப்பட்டதே தவிர சட்டவிரோதமான முறையில் யாருக்கும் டீசல் வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு பேருந்துகள் இங்கு வந்து எரிபொருளை நிரப்புவது தேவையற்ற செலவினங்களை ஏற்படுத்தும் என்ற அடிப்படையிலேயே கொள்கலன்களில் எரிபொருள் நிரப்பப்பட்டு குறித்த சாலைக்கு பேருந்து மூலம் அனுப்பப்பட்டது. அத்துடன் 750 வழித்தட தனியார் பேருந்து சங்கத்தினர் சுழற்சி முறையில் பேருந்துகளுக்கு டீசலை விநியோகிக்க விடாது ஒட்டுமொத்த பேருந்துகளுக்கும் ஒரே நாளில் டீசலை விநியோகிக்க வேண்டும் என்று கோருகின்றனர். இது நியாயமற்றது- என்றார்.

இதுதொடர்பில் 750 வழித்தட தனியார் பேருந்து சங்கத்தின் செயலாளர் தெரிவிக்கையில்,

நகர சபையின் உழவு இயந்திரங்களுக்கும் பொலிஸாரின் ஜீப் வாகனங்களுக்கும் மற்றும் சுற்றுலா சார் பேருந்துகளுக்குமே டீசல் வழங்கப்பட்டுள்ளதே தவிர மக்களுக்கான எமது தனியார் சேவை பேருந்துகளுக்கு வழங்கப்படவில்லை.

எமது பிரதேசத்துக்குரிய தனியார் வழித்தட பேருந்துகளுக்கு டீசல் விநியோகிக்கப்படாமல் வேறு இ.போ.ச. சாலையின் பேருந்துகளுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படுகிறது.

எமது வழித்தட தனியார் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் இந்தத் தொழிலை நம்பியே ஜீவனோபாயம் மேற்கொள்கின்றனர். ஆகவே எமது சாலை முகாமையாளர் மனிதாபிமானமாக செயற்பட வேண்டும் - என்றார் (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பேரவலம்; ரஷ்யாவே முழுக்காரணம்!

## உக்ரைனின் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 15**

**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பெரு நெருக்கடிக்கு ரஷ்யாவே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் உக்ரைனின் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு உலகம் முழுவதும் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் மீதான படையெடுப்பில் ரஷ்யா பல தந்திரோபாயங்களை பயன்படுத்தியது. அவற்றில் ஒன்று 'பொருளாதார அதிர்ச்சியை' சர்வதேச அளவில் உருவாக்குவதாகும். விநியோகச் சங்கிலியில் நிலவும் நெருக்கடி மற்றும் சீர்குலைவு காரணமாக உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறையை நாடுகள் சந்திக்கும் நிலையில், அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இது ரஷ்யாவின் நிகழ்ச்சி நிரலுக்கு பயனளித்துள்ளது. ஓர் உதாரணத்தை மட்டும் பாருங்கள் - இலங்கையில் நடந்த நிகழ்வுகள். அதிர்ச்சியூட்டும் உணவு மற்றும் எரிபொருள் விலை உயர்வு ஒரு சமூக வெடிப்புக்கு வழி வகுத்தது. அது எப்படி முடிவடையும் என்று இப்போது யாருக்கும் தெரியாது. இருப்பினும், உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மற்ற நாடுகளிலும் இதே போன்ற வெடிப்புகள் சாத்தியமாகும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த நெருக்கடிகளின் தீவிரத்துக்கு என்ன காரணம்? ரஷ்யாவின் இந்த முற்றுகை. எங்கள் துறைமுகங்களில் இருந்து உலக சந்தைக்கு முக்கியமான உக்ரேனிய உணவு விநியோகத்தை நாங்கள் செய்யவில்லை. மேலும் எரிசக்தி விலைகளை உயர்த்துவதும் ரஷ்யாவின் இன்னொரு நகர்வு - என்றார். (ம)



# ஜூலை 9ஆம் திகதிய தீர்மானத்தில் மாறாதீர்

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஜூலை 9ஆம் திகதி ஏற்றுக்கொண்டவாறு செயற்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜூலை 9ஆம் திகதி இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம், உடனடியாக புதிய ஜனாதிபதியை நியமிக்க வேண்டும். பின்னர் ஒப்புக்கொண்டபடி புதிய பிரதமரை நியமிக்க வேண்டும். இந்த நடைமுறைகளை ஒத்திவைப்பதன் மூலம் தற்போதைய நிலைமை மேலும் மோசமடையலாம். இலங்கை 'நீதியற்ற அராஜக நாடாக' மாறுவதை யாராலும் தடுக்க முடியாது - என்றார். (ம)

# ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட சட்டவாட்சியை உறுதிப்படுத்துக

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 15

நீண்டகால பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை பேண சட்டவாட்சியை உறுதிப்படுத்துங்கள் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது ருவிற்றர் பதிவில்,

தற்போது மக்கள் தமது உரிமைக்காகப் போராடுகின்ற நிலையில் அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் அனைத்துவகையான வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் கண்டிக்கின்றோம்.

பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஜனநாயக நிர்வாகம் மற்றும் சிறந்த எதிர்காலத்துக்கான மக்களின் கோரிக்கைகளை ஜனநாயக மற்றும் அரசமைப்பு கட்டமைப்புக்கு அமைதியான அதிகாரப் பரிமாற்றத்தின் மூலம் மாத்திரமே அடைய முடியும். ஆகவே பொருளாதார, அரசியல் ஸ்திரத்தன்மையை பேண இலங்கையில் சட்டவாட்சி உறுதிப்படுத்தப்படவேண்டும் -என்றார். (ச-இ)

# இலங்கையின் நிலைமையில் மிக உன்னிப்பாகக் கவனம்!

## ஐ.நா. பொதுச்செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் உறுதித்தன்மையற்ற நிலையையும் பதற்றங்களையும் ஐக்கிய நாடுகள் சபை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் முட்டுக்கட்டைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண சமரச மனப்பான்மையைக் கடைப்பிடிக்குமாறு கட்சித் தலைவர்களை வலியுறுத்துகின்றேன். மோதலின் அடிப்படைக் காரணங்கள் மற்றும் எதிர்ப்பாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்வது முக்கியம் என்றும் நான் சார்ந்தோரை வலியுறுத்துகின்றேன் -என்றுள்ளது. (ம)

# கோத்தாபயவை விரட்டுவோம் நீதியின் முன் நிறுத்துவோம்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிப்பு

> **சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில், இனப்படுகொலையாளி கோத்தாபய ராஜபக்ச கைது செய்யப்பட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

கொழும்பு, ஜூலை 15

தமிழர்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனப்படுகொலையாளி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிரான போராட்டங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் பெருமெடுப்பில் தயாராகி வருகின்றனர் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டைவிட்டு வெளியேறி தற்போது மாலைதீவில் தஞ்மடைந்துள்ள சிறிலங்காவின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அங்கிருந்து சிங்கப்பூருக்கு செல்ல இருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

இந்நிலையில் சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில், இனப்படுகொலையாளி கோத்தாபய ராஜபக்ச கைது செய்யப்பட்டு அந்த நாட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் அந்த நாட்டுத் தூதரகங்கள் முன்னால் போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'ஓட ஓட விரட்டுவோம்...நீதியின் முன் நிறுத்துவோம்...!' என்ற முழக்கத்துடன் ஏற்பாடாகி வரும் இந்தப் போராட்டத்தில் அனைத்து தமிழர் அமைப்புக்கள் [illegible] நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு கோருகின்றது - என்றுள்ளது.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ள சிறிலங்காவின் அரச பிரதிநிதிகளுக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள் சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என ஐ.நா. மனித உரிமைச்சபையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் முன்னர் அழைப்பொன்றினை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடதக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தந்திரப்புத்தி ஆபத்தானது!

நாட்டில் அரசியல் நிலையற்றதன்மை பூதாகரமாகியிருக்கின்றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறி, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட மறுகணமே அரச அடக்குமுறைகள் மிகத்தீவிரமாகவும் சகிக்க முடியாத அளவுக்கும் நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. 'ஜனாதிபதி' பதவி என்பது ரணிலின் வாழ்நாள் கனவு. அந்தப் பதவிப் பேராசையால், தனது இலக்கை அடைவதற்கு, எந்த விலையையும் கொடுப்பதற்கு ரணில் தயாராகவே உள்ளார். அதனையே கொழும்பில் தற்போது அரங்கேறிக் கொண்டிருக்கும் காட்சிகள் தெளிவாகவே புடம்போடுகின்றன.

ஜனாதிபதி கோத்தாபயவுக்கும் இதர ராஜபக்சக்களுக்கும் எவ்வாறு சர்வாதிகாரிகள், ஊழல் பேர்வழிகள் என்ற விம்பம் இருக்கின்றதோ அதேபோன்று ரணிலுக்கு சர்வதேசத்தில் இருப்பது ஜனநாயக முகம். இந்த ஜனநாயக முகம்தான் ரணிலின் பலமாக இதுவரை இருந்தது. ஆனால், சர்வதேசம் நினைத்துக்கொண்டிருப்பதைப் போன்று ரணிலின் அரசியல் ஆசைகளும், தந்திர நகர்வுகளும் அவ்வளவு மென்போக்கானவை அல்ல என்பதை அனைத்துத் தரப்புகளும் தெரிந்துகொள்ளவேண்டும். ரணில் தொடர்பான பார்வையை மாற்றியெழுதுவதுடன், அதை அப்பட்டமாக வெளிப்படுத்த வேண்டியதும் இப்போது காலத்தேவை.

உண்மையில் ராஜபக்சக்களின் அரசியலை விடவும் ரணிலின் அரசியலே அதி பயங்கரமானது. அடுத்ததாக இதுதான் நடக்கும் என்று கண்டறிய முடியாதன அவரின் நகர்வுகள். இந்த விடயமே தற்போது இலங்கையை மே 9 ஆம் திகதிய பதற்ற நிலையை விடவும் ஆபத்தில் தள்ளியுள்ளது. ரணிலின் இந்தத் திரைமறைவுக் காய்நகர்த்தலாலும், பிரித்தாளும் சக்தியாலும் காலிமுகத்திடல் போராட்டம் இனிவரும் நாள்களில் எப்படியேனும் திசைமாற்றப்படலாம் என்ற அச்சமும் தற்போது வலுவாகவே எழுகின்றது.

காலிமுகத்திடல் போராட்டம் ஏற்படுவதற்கு கோத்தாபய அரசாங்கம்தான் காரணம் என்றால், அது தற்போது உச்சக் கொதிநிலையை அடைந்துள்ளமைக்கு முழுக்காரணம் ரணில்தான். ஜனாதிபதி எப்போது பதவி விலகுவார் என்ற ஒரு 'வெள்ளை அறிக்கையை' வெளியிட்டு, அரசாங்கத்தின் அடுத்தகட்ட நகர்வுகளைத் தெளிவுபடுத்தினாலேயே பாதிப்பிரச்சினை தீர்ந்துவிடும். அடுத்தது என்ன? என்ற தெளிவற்ற நிலைதான் இத்தனை குழப்பங்களுக்கும், களேபரங்களுக்கும்காரணம். இந்தக்குழப்பங்களுக்கு வித்திட்டவர் ரணில்.

ஒரு கால்வாய் வழியாக வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி, பின்னர் அதைத் திறந்துவிட்டால் அது எவ்வாறு கட்டற்றுப் பாயுமோ அதுபோன்றதுதான் ரணிலின் குரூர – குறுகிய அரசியல். தண்ணீராகப் பாய்ந்துகொண்டிருந்த காலிமுகத்திடல் போர்க்களத்தை கோத்தாபயவின் பதவி விலகலைவைத்து சாந்தப்படுத்த – தடைபோட எத்தனித்தார். ராஜபக்சக்களைக் காப்பாற்றும் கைங்கரியமும், தன்னை அடுத்த ஜனாதிபதியாக்கும் நரித்தனமும் அதில் ஒளிந்திருந்தன. ஆனால், 'கோத்தாபயவின் பதவி விலகல்' என்ற முறைப்படி போடப்படாத அந்தத் தடை, இந்தக் கட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்த இம்மியும் போதாதது. தடைகள் தண்ணீரை மறிப்பதற்கு மட்டுமல்ல வேகமெடுக்கவும் காரணமாகின்றன. ரணிலின் செயலால் வெள்ளம் இன்னும் வேகமெடுக்கத்தான் போகின்றது. அதற்குள் ரணிலின் பதவி விலகல், சர்வகட்சி அரசாங்கம் என்று அடுத்தடுத்த தடைகளைப் போட்டுவிடுவதுதான் ரணிலுக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது.

நாளொரு நல்வார்த்தை

"முன்னேற்றத்தை நோக்கி அடி எடுத்து வையுங்கள் அது எத்தனை சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை"

- மாவீரன் நெப்போலியன்




# பிரதமர் அலுவலகம் ஆக்கிரமிப்பு சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி

**கொழும்பு, ஜூலை 15**

**கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தை ஆக்கிரமித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமைக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதுடன், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், உடனடியாக பிரதமர் அலுவலக வளாகத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.**

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தால் நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

அரச அலுவலகங்களை ஆக்கிரமிக்க முயற்சிப்பது மற்றும் சொத்துக்களை சேதப்படுத்துவது அமைதியான போராட்டமாக இருக்காது. சபாநாயகர், பிரதமர் மற்றும் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் நாட்டின் நிலையை, சூழ்நிலையை புரிந்து கொண்டு மிகுந்த பொறுப்புடனும், தியாக உணர்வுடனும் செயற்பட வேண்டும். அதே நேரம் நாட்டின் அரசியல் தலைவர்கள் உறுதியளித்த அமைதியான அதிகார மாற்றத்துக்கு இடமளிக்குமாறு இலங்கை மக்களிடம், குறிப்பாக போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களிடம் கோருகிறோம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகல் குறித்த அறிவிப்பு இன்று (நேற்றுமுன்தினம்) வெளியிடப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்தது. எனினும், ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அவரின் பதவி விலகல் கடிதம் தொடர்பில், பொதுமக்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதற்கிடையில், பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. அத்துடன் அரசமைப்பின் கீழ் பிரதமரை பதில் ஜனாதிபதியாக நியமித்ததாக சபாநாயகர் அறிவித்தார். இந்த மாறுபட்ட தகவல்தொடர்புகள் பொதுமக்களிடையே குழப்பத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளன - என்றுள்ளது. (ம)

# கொழும்பில் மீளவும் நேற்று ஊரடங்கு!

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு மாவட்டத்துக்குட்பட்ட பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து இன்று அதிகாலை 5 மணிவரை மீண்டும் ஊரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் தற்போதைய பதற்ற நிலைமையை கருத்திற்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் ஊரடங்குச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் ஆகியன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பிறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை 16.07.2022 சனிக்கிழமை ஆனி 32

சுபநேரம்: 03.00 - 04.30
ராகுகாலம்: 9.00 - 10.30

சங்கடஹர சதுர்த்தி, கார்மேல் மாதா திருவிழா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

























## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பிறரால் செய்ய முடியாத ஒரு செயலை செய்து முடிப்பீர்கள். தொழிலில் ஏற்பட்ட தடைகளை சரி செய்து லாபம் காண்பீர்கள். எதிர் பார்ப்பு நிறைவேறும்.

**இடபம்:** எதிர்பார்த்த தகவல் வீடு வந்து சேரும். மனதில் உற்சாகம் அதி கரிக்கும். குடும்பத்தில் உண்டான பிரச்சினைகளை சரிசெய்வீர்கள். புதிய முயற்சி நிறைவேறும்.

**மிதுனம்:** சந்திராஷ்டமத்தினால் சங்கடம் உண்டாகும். விழிப்புணர்வு தேவை. எதிர்பார்த்த செயல் ஒன்று நிறைவேறாமல் போகும். வார்த்தை களில் கவனம் தேவை.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற் பட்டு நீங்கள் விரும்பியதை அடை வீர்கள். நன்மையான நாள். நண் பரின் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சி ஒன்று வெற்றி பெறும். எதிர்பாராத லாபம் வந்து சேரும்.

**சிம்மம்:** வெளி இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பகைவர்கள் வில கிச்செல்வர். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். வழக்கு விவகாரம் உங்களுக்கு சாதகமாகும். முயற்சி அனுகூலமாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த வரவு வந்து சேரும். குடும்பத்துக்காக சேமிப்பை ஏற்படுத்து வீர்கள். வியாபாரத்தில் உங்கள் எதிர் பார்ப்பு நிறைவேறும். லாபம் அதிகரிக் கும். குடும்பத்தில் நன்மை உண்டாகும்.

**துலாம்:** அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு ஒன்றில் பின்னடைவு ஏற்படும். தாயாரின் உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி வரும். பணவரவில் தடை உண்டாகும்.

**விருச்சிகம்:** வியாபாரத்தில் புதிய உத்திகளைக்கையாள்வீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும். அரசு வழியி லான செயலில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**தனுசு:** நேற்று வரை இழுபறியாக இருந்த ஒரு செயல் இன்று நிறைவேறும். வேலை இடத்தில் உங்கள் உழைப்பை பாராட்டுவர். யோகமான நாள். இறை சிந்தனை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தகாரரை சேர்ப்பீர்கள்.

**மகரம்:** வேலைப்பளு அதிகரிக்கும். செயல்களில் கவனம் அவசியம். பிறருடன் கருத்து வேறுபாடு உண்டா கும். அனுசரித்துச் செல்ல வேண் டிய நாள். குடும்பத்தினருடன் மன வருத்தம் ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். வழக்கமான செயல்களில் இழுபறியாகும். வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் காணமுடியாது. வரவு செலவில் கவனம் தேவை.

**மீனம்:** மற்றவர் விரும்பும் வகையில் உங்கள் செயற்பாடுகள் இருக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். நீங்கள் நினைத்தது நடந்தேறும். புதிய முயற்சி ஒன்று பலிதமாகும்.

# எரிபொருள் அட்டைக்கு மாத்திரமே நுணாவில் ஐ.ஓ.சியில் எரிபொருள்

நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் அட்டைக்கு மாத்திரமே நேற்று எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. யாழ்.மாவட்டச் செயலகத்தின் பணிப்பின்கீழ் சாவகச்சேரி பிரதேசசெயலர் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அத்தியாவசிய சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் மோட்டார் சைக்கிள், கார், ஓட்டோ போன்றவற்றுக்கு மட்டும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊடாக எரிபொருள் அட்டையில் உரிய பதிவுகளை மேற்கொண்டு மாவட்டச்செயலக உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. (ஒ-14,159)

# புலோலியில் டீசல், பெற்றோல் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

மந்திகை - புலோலிப் பகுதியில் பெற்றோல் மற்றும் டீசல் என்பன நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புலோலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றது என்று பருத்தித்துறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 10 லீற்றர் பெற்றோல் மற்றும் 20 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டன.

பருத்தித்துறை சாலை சாரதி ஒருவரே இவ்வாறு சட்டவிரோதமாக எரிபொருளை விற்பனை செய்துவந்துள்ளார்.

அதனையடுத்து சாரதியை பருத்தித்துறைப் பொலிஸார் கைதுசெய்ததுடன் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் ஒருவரது வீட்டில் கைப்பற்றப்பட்ட 450 லீற்றர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அத்தியாவசியமான தேவைகளுக்கு வழங்குமாறு புலோலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது என்றும் தெரிவித்தனர். (ஒ-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கச்சாய் பகுதியில் கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி, ஜூலை 15
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
முதலாம் கட்டை கச்சாய் பகுதியில் தனியார் காணியை அதன் உரிமையாளர் துப்புரவு செய்தபோது சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை அவதானித்தார்.
இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான பொருள் கைக்குண்டுதான் என்பதை இனங்கண்டனர். அதன்பின்னர் நீதிமன்ற அனுமதிபெற்று கைக்குண்டை மீட்கும் நடவடிக்கையை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்தனர்.

(ஒ-14-125)

# அமைதியான முறையில் அரசியல் மாற்றம் தேவை

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 15**
**இலங்கையில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் வன்முறையைத் தவிர்த்து அமைதியான அரசியல் மாற்றத்தை உறுதி செய்யுங்கள் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவில் இவ்வாறு தெரிவித்துள்ளது.
அதில் மேலும் உள்ளதாவது:-
கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அவர்களது மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து வன்முறைச் செயற்பாடுகளிலிருந்து விலகி உரியவாறான கட்டுப்பாட்டுடன் இராணுவத்தினர் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பாதுகாப்புத் தரப்பினரும் செயற்படவேண்டும்.
அதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற போராட்டத்தின்போது பிரதமரின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் சேதமாக்கப்பட்டன. ஆகவே சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட அனைவரும் உயிருக்கும் உடைமைகளுக்கும் மதிப்பளித்து அமைதியான முறையில் அரசியல் மாற்றமொன்றை பெறுவதற்கு வழிவகுக்கவேண்டும் - என்றுள்ளது.

(ச-இ)

# நற்பெயருக்குக் களங்கம் வராமல் ஆட்சிக்கட்டமைப்பை ஏற்படுத்துக!

## பௌத்த பீடங்களின் பீடாதிபதிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 15
உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாத வகையில் முறையான ஆட்சிக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை பிரதான பௌத்த பீடங்களின் பிரதம பீடாதிபதிகள் வலியுறுத்தியுள்ளனர்.
இந்த அறிக்கையில் மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர், அஸ்கிரிய பீடாதிபதி வரகாகொட தம்மசித்தி ஸ்ரீ ஞானரதாபிதான மகாநாயக்க தேரர், அமரபுர நிகாயாவின் பீடாதிபதி தொடம்பஹல ஸ்ரீ சந்தசிறி தேரர், ராமன்ய பீடாதிபதி மகுலவே ஸ்ரீ விமல தேரர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.
நாடாளுமன்றத்தை கூடிய விரைவில் கூட்டி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கட்சித் தலைவர்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்க்கவும், சட்டத்தின் ஆட்சியை மதித்து அமைதியான போராட்டங்களில் ஈடுபடவும் போராட்டக்காரர்களை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(ம)

# சுகாதாரப் பணியாளர்களுக்கான எரிபொருள் எப்போது வழங்குவீர்?

## சுகாதாரத்துறையினர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 15
சுகாதாரப் பணியாளர்களுக்கான எரிபொருள் எப்போது வழங்குவீர்கள் என்று யாழ். சுகாதாரத் துறையினர் கேள்வியெழுப்பியுள்ளனர்.
அத்தியாவசிய சேவையான சுகாதாரத் துறையினருக்கு வாரத்தின் வெள்ளிக்கிழமைகளில் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.
எனினும் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட மாட்டாது என்று சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.
அதனடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை அவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை. இதனால் சுகாதாரப் பணியாளர்கள் கடமைக்குச் செல்வதற்கு பெரிதும் சிரமமப்பட்டு வருகின்றனர்.
இந்த நிலையிலேயே தமக்கு எப்போது எரிபொருள் வழங்குவீர்கள் என்று சுகாதாரப் பணியாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.
இதேவேளை சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்காவிட்டால் சுகாதாரப்பணிகள் முடங்கும் அபாயநிலை ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-14-17)

# ரணில் விலகாவிட்டால் இலங்கை லிபியாவாகும்

## விமல், கம்மன்பில, வாசு கூட்டுக்கோரிக்கை

ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பதவிவிலக வேண்டும். இலங்கையை தெற்காசியாவின் லிபியாவாக மாற்றாமலிருப்பது அனைவரது பொறுப்புமாகும் என முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான நாடாளுமன்ற சுயேச்சைக் குழு அறிக்கையொன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்தக் குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
ஜனாதிபதி, பிரதமரை பதவி விலகும்படி ஜூலை 9ஆம் திகதியன்று சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. பிரதமர் பதவி விலகாததால் நாட்டில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. அது வன்முறையை நோக்கி வளர்வதையும் அவதானிக்கிறோம். அதன் விளைவாக பிரதமர் அலுவலகத்தை போராட்டக்காரர்கள் கைப்பற்றியுள்ளனர். எனவே, பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும். அவர் இராஜினாமா செய்து சபாநாயகரிடம் நாட்டை ஒப்படைத்து அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்று கோருகிறோம்.
சிலர் நாடாளுமன்றத்தை முற்றுகையிட முயல்வதை நீங்கள் அறிந்திருக்கலாம். இது எந்த நோக்கத்துக்காக உதவுகிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. நாடாளுமன்றம் மக்களின் இறையாண்மை மற்றும் ஜனநாயகத்தின் உச்சம். நாடாளுமன்றத்தின் இருப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை மக்கள் இறைமைக்கும் ஜனநாயகத்துக்கும் மரண அடியாகவே பார்க்கிறோம்.
ஜூலை 20ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதி தெரிவுக்கும், அதன் மூலம் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் நாடாளுமன்றத்தின் பணிகளை இடையூறு செய்வது தடையாக உள்ளது. அத்துடன், தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது முக்கியமான காரணியாகும்.
எனவே, ஜனநாயகத்தையும் நாடாளுமன்றம் தலைமையிலான ஜனநாயக நிறுவனங்களையும் பாதுகாப்பது அரசாங்கம், பாதுகாப்புப் படையினர், அனைத்து அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் கடமை என்பதை நாங்கள் உறுதியாக வலியுறுத்துகிறோம். அராஜகம் மற்றும் வன்முறை காரணமாக, இலங்கை மனிதப் பேரழிவை நோக்கி வேகமாக நகர்கிறது. இலங்கையை தெற்காசியாவின் லிபியாவாக மாற்றாமல் இருக்க ஒட்டுமொத்த தேசமும் கைகோர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(ம)

# மீண்டும் ஆரம்பமானது எரிவாயுப் போராட்டம்

மன்னார், ஜூலை 15
எரிவாயு வழங்குமாறு கோரி மன்னாரில் மீண்டும் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று எரிவாயு விநியோகிக்கப்பட்டது. ஆனால் பேசாலைப் பகுதி மக்களுக்கு எரிவாயு வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. இதனால் ஆவேசமடைந்த பேசாலை மக்கள் எரிவாயு சிலிண்டரை வீதியில் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பேசாலைப் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சு நடத்தி பேசாலைக் கிராமத்துக்கு 100 எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தனர்.



அதன்பின்னரே மக்களால் போராட்டம் கைவிடப்பட்டது.

(ஒ-14-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் தர்மலிங்கம் கனகலிங்கம்

(முன்னாள் உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம் கிளை)



அன்னை மடியில்
08.04.1957

இறைவன் அடியில்
05.07.2012

அன்பு அப்பா!
ஆண்டுகள் பத்து கடந்ததுவே
- இந்நாளில்
ஆண்டுகள் பல சென்றாலும்
- உங்கள்
பசுமையான நினைவுகள்
- என்றும்
எம்மை விட்டு அகலாது...

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

லைமன் லேன், லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 . 09 . 1957



மறைவு
26 . 06 . 2021

## அமரர் சிவபாதம் கணேசலிங்கம்

(கோண்டாவில் மேற்கு)

திதி:அபரபக்க துதியை


ஆண்டு ஒன்று சென்றாலும் நாம் ஆறாத துயரோடு வாழ்கின்றோம்
நீ இல்லையென்று எண்ண எம் மனம் மறுக்கின்றது
தம்பி வாழ்கின்றாய் எம் நெஞ்சினில்
தோற்றது எம் வாழ்க்கை தொலைந்தது எம் சந்தோசம்
ஆறாது எம் துயர் அழியாது உன் நினைவு
செம்மணி விநாயகர் உன்னை தன் பாதத்தில்
சேர்த்துக்கொண்டார்.

*உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சும்...*

குடும்பத்தினர்
உற்றார், நண்பர்கள்.

# மரண அறிவித்தல்

## சண்முகலிங்கம் கோபிநாத்



தோற்றம்
01.05.1991

மறைவு
06.07.2022

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் கோபிநாத் அவர்கள் கடந்த (06.07.2022) புதன்கிழமை மலேசியாவில் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் சண்முகலிங்கம் செல்வராணி தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி ஹம்சாலினி, உஷாந் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிறோஷன் (Ancheneyer Construction) அவர்களின் அன்பு மைத்துனரும், சமிக்ஷா, லோகித் ஆகியோரின் அன்பு மாமனும், திருச்செல்வம் (Diamond stores), அருட்செல்வம் (அதிபர் ATC), சோதிநாதன் (பிரான்ஸ்), சரோஜாதேவி, கலைவாணி, ஜெயசீலி ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி நாகலட்சுமி, காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி, யோகராணி மற்றும் ரஞ்சி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 19972) (3/6)

தகவல் : குடும்பத்தினர்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 05 . 1927



மறைவு
06 . 07 . 2020

யாழ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, பரந்தன், யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் கிருஸ்ணர் இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)

திதி: 15-07-2022

அன்புத் தந்தையே,
தாம் எமைப் பிரிந்து ஈராண்டுகள் கடந்து போயின
ஆயினும் மாறவில்லை எதுவும், ஆண்டுகளைத் தவிர
எங்கும் எதிலும் எம் அனைவரின் உள்ளும்
நினைவால் நிறைந்து நிற்கின்றீர்கள்!
தங்களின் ஆத்ம சாந்தி வேண்டி
எல்லாம் வல்ல இறைவனை வழிபடும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்**

(CS 19982) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 02 . 1963



இறப்பு
14 . 07 . 2022

## திருமதி பாஸ்கரன் மகாலட்சுமி

(குட்டி அக்கா)

21/1, சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாஸ்கரன் மகாலட்சுமி (குட்டி அக்கா) அவர்கள் நேற்று (14.07.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மகேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்ற இராசையா மற்றும் அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், பாஸ்கரன் அவர்களின் அன்பு மனைவியும் பவதாரிணி அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தங்கையும், சிறீகரன், அன்பழகி, வினித்தா, வசந்தகுமார் ஆகியோரின் மைத்துனியும் நிசானி, துளசிராம் ஆகியோரின் பெரியம்மாவும் விஜயராம் அவர்களின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (15.07.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் கிருபாமூர்த்தி சிந்துஜன்



ஆற்பெரும் துயர் தந்து எம்மை நீ பிரிந்து சென்று
ஆண்டொன்று பறந்ததுவே!
எத்தனை கனவு கண்டாய், எவ்வளவோ கதை கதைப்பாய்
அத்தனையும் கனவாய் போனதுவே
பிறர் துன்பம் கண்டு விட்டால் நீயோ மனம் வருந்திடுவாய்
நீ பட்ட துன்பத்திற்கு கடவுள் கூட மனம் இரங்கவில்லையே!
தலைமேல் இரு கரம் கூப்பி இறைவனை வணங்கிடுவாய்
அதை நினைக்கையிலே நெஞ்சு இன்னமும் தான் கனக்கின்றதே
வாழும் நாள் முழுவதுமே எமக்கு ஆறாத வலியைத் தந்து சென்றுவிட்டாயே!
இறுதித் தருணங்களில் நீ இருந்த நிலை நினைத்தால்
இன்னமும் தான் வலிக்கின்றதே கண்ணா!
அதனை எப்படித்தான் எம் வாயால் உரைத்திருக்க முடியும்?
பிறருக்கு இது புரிந்திடுமா?
இத் தலைமுறையின் மூத்த வாரிசு நீ தான் என்று
அடிக்கடி கூறிடுவாய்
அதுபோல் மூத்த வாரிசாகவே எம் மூத்தோரிடம் சென்று விட்டாய்
அங்கும் செல்லப்பிள்ளை நீ!
பேரன் பேர்த்திமார் நடுவே சிம்மாசனத்தில் ஓராண்டு நிறைவுடன் நீ
சிந்து! ஆண்டொன்றல்ல ஆயிரம் ஆயிரம் சென்றிடினும்
உன் நினைவுகளுடனேயே
எம் எஞ்சியிருக்கும் நாட்கள் நகரும்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம்
20.02.1988

மறைவு
26.06.2021

"அக்கா அகம்"
சிந்துஜன் ஒழுங்கை,
யோகேஸ். வீதி, இணுவில் மேற்கு.

என்றும் உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்


# மண்ணெண்ணெய் இன்மையால் 7,000 மீனவ குடும்பங்கள் பாதிப்பு

## முல்லை கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் அருள்நாதன் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூலை 15**

**மண்ணெண்ணெய் இன்மையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆயிரம் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அருள்நாதன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு மேல் எரிபொருள் இல்லாத நிலையில் ஆயிரத்து 500 வரையான படகுகள் தொழிலில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் 7ஆயிரம் வரையான மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு உரம் வழங்குகின்றனர். ஆனால் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை. கறுப்புச்சந்தையில்



ஆயிரத்து 100 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் விற்பனையாகின்றது. இது எங்கிருந்து வருகின்றது?

கொழும்பில் எரிபொருள் சுத்திகரிக்கும் இடத்திலிருந்து நீர் கொழும்பு, சிலாபம் ஊடாக எடுத்து வரப்படும் வெள்ளை மண்ணெண்ணெயை சிலர் முல்லைத்தீவில் விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறு எமது மீனவர்களின் நிலை இருக்க, இந்திய இழுவைப்படகுகள் எங்கள் கடல் வளங்களை அழிக்கின்றார்கள். நாட்டில் வாழ முடியாத நிலையில் மக்கள் கடல் வழியாகத் தப்பிச் செல்லும்போது அவர்களைப் பிடிக்கின்றனர். ஆனால் தமிழகப் படகுகளைவிட்டுவிடுகின்றனர். இவ்வாறான நிலையில் மக்கள் எந்த நிலைமைக்குச் செல்வார்கள் என்று யாருக்கும் விளங்கவில்லை. மீனவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கவேண்டும் அல்லது மண்ணெண்ணெய் வழங்க ஆவன செய்யவேண்டும். இவ்வாறு வழங்காது மீனவர்களுக்கு இந்த நிலைமை தொடருமாகவிருந்தால் அடுத்த கட்டமாக மீனவர்களும் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்போம் என்பதை மாவட்டச்செயலருக்குத் தெரியப்படுத்துகின்றோம் - என்றார். (ஒ-14.19)

# குளவிகளின் தாக்கம் அதிகரிப்பு; மக்களே அவதானம்!

## சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 15

சாவகச்சேரிப் பிரதேசத்தில் குளவிகளின் தாக்கம் அதிகரித்துள்ளதால் மக்களை அவதானமாகச் செயற்படுமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மரங்களிலிருந்து கலையும் குளவிகள் வீதியில் செல்வோரைக் கொட்டுகின்றன.

மீசாலை மேற்கு மற்றும் மந்துவில் மேற்குப் பகுதிகளில் வீதியில் பயணித்த நால்வர் அண்மையில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீசாலை மேற்கில் 28 வயதான பெண்ணும் 8 வயது சிறுமியும் மந்துவில் மேற்கில் 39 வயதான தாயும் நான்கரை வயதான பெண் குழந்தையுமே இவ்வாறு குளவிகளால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தற்போது கடும் காற்று வீசுவதால் மரங்களில் கூடுகட்டியுள்ள கருங்குளவிகள் காற்றின் வேகத்தில் கலைகின்றன. இதனால் வீதியில் பயணிப்போரை வேகமாகத் தாக்குகின்றன. எனவே வீதிகளில் பயணிப்போர் மிக அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14,9)

# கிளிநொச்சியில் எரிவாயு விநியோகம்

கிளிநொச்சி, ஜூலை 15

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு பின்னர் நேற்று லிட்ரோ எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விநியோகஸ்தர் காரியாலயத்தில் 600 க்கும் மேற்பட்ட மக்களுக்கு எரிவாயு விநியோகிக்கப்பட்டது. இதன்போது பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிவாயுவைப் பெற்றனர்.

எனினும் எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதிலும் பெற்ற எரிவாயுவைக் கொண்டு செல்வதிலும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு ஓட மாட்டோம் உறுதியளித்த மஹிந்த, பஸில்

**கொழும்பு, ஜூலை 15**

**தங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்வரையில் நாட்டை விட்டு வெளியேற மாட்டோம் என்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோர் நேற்று நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ளனர்.**

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பி. தெஹிதெனிய ஆகியோரின் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே அவர்கள் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ளனர்.

அதேவேளை, நாட்டை விட்டு வெளியேறுவதற்காக விமான நிலையம் சென்ற பஸில் ராஜபக்ச விமான நிலைய அதிகாரிகளால் திருப்பியனுப்பட்டிருந்தார். அதன்பின்னர் அவர் வேறு மார்க்கத்தில் வெளிநாடு சென்றார் என்று முன்னர் தகவல் வெளியாகியிருந்தது. (எ-இ)

# கோத்தாபய பதவி விலகலை அறிவித்த மொஹமட் நஷீட்!

கொழும்பு, ஜூலை 15

கோத்தாபய ராஜபக்ச தனது பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதன் காரணமாக இலங்கை முன்னேறும் என நம்புகின்றேன். இலங்கைக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கையில் இருந்திருந்தால், அவர் பதவி விலகியிருக்க மாட்டார். மாலைதீவு அரசு அந்தத் தருணத்தில் நடந்துகொண்ட விதத்தைப் பாராட்டுகின்றேன் என்று அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தவறிவிட்டது

கடந்த 06.07.2022 அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது நீல நிறப்பையுடன் காணி உறுதி தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.இல:- 070 2624 996

# கடை உடைத்து பணம் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 15

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடி மூளாய் பகுதியில் உள்ள கடை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொன்னாலை மேற்கைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கடை உடைக்கப்பட்டு 5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். இந்த நபர் முன்னர் மோட்டார் திருட்டுக்களில் ஈடுபட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்ததை அடுத்து இரு மோட்டார்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

# நாடு மிக விரைவில் முடங்கும் அபாயம்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

நிலையான அரசாங்கம் விரைவாக அமைக்கப்படாவிட்டால் நாடு முடக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய எரிபொருளுக்குச் செலுத்தத் தேவையான அந்நியச் செலாவணி கிடைக்குமா என்பதில் நிச்சயமற்ற நிலை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமான பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் வாரம் எரிபொருள் கப்பல்கள் இலங்கைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்குரிய கட்டணங்கள் தொடர்பாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. (எ-இ)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 10 . 02 . 1963

இறப்பு 14 . 07 . 2022



எமது ஸ்தாபனத்தின் சக ஊழியரான பாஸ்கரன் அவர்களின் அன்பு மனைவி

**பாஸ்கரன் மகாலட்சுமி**

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**வனிக்கா மெடிக்கல்ஸ்**

உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்

இல.203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# தமிழகத்தின் அடுத்த கட்ட நிவாரணம் நேற்று கிளிநொச்சியை வந்தடைந்தது

**கிளிநொச்சி, ஜூலை 15**

தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உதவிப்பொருள்களில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள்கள் நேற்று அதிகாலை ரயிலில் வந்தடைந்தன.

நிவாரணப்பொருள்களை இறக்கும் பணிகளில் மாவட்டச் செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தனர். அதில் 35 ஆயிரத்து 400 கிலோகிராம் அரிசியும் 2 ஆயிரம் கிலோகிராம் பால் மாவும் உள்ளதாக கிளிநொச்சி மாவட்டச்செயலர் தெரிவித்தார். அதற்கமைய நிவாரணப் பொருள்கள் மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் மாவட்டச்செயலர் தெரிவித்தார். (ஓ-14-113)

## மரண அறிவித்தல்

### தியாகராசா பொன்னம்மா

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் மட்டுவில் வீதி, கல்வயல் சாவகச்சேரி என்னும் முகவரியை வதிவிடமாகவும் கொண்ட தியாகராசா பொன்னம்மா நேற்று (14.07.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவர் நாகமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற செல்லப்பா தியாகராசா (சாத்திரியார்) அவர்களின் அன்பு மனைவியும், ரஞ்சிதாதேவியின் அன்புத் தாயாரும், இராமச்சந்திரன் (குபாலகம் - சாவகச்சேரி) அவர்களின் மாமியாரும், அகிலன், கபிலனி, ரவிகிருஸ்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம் மட்டுவில் வீதி, கல்வயல், சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர். 077 9330 485

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி மகேந்திரராசா

அரசடி வீதி, 5ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் அராலி வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேந்திரராசா நேற்று (14.07.2022) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மகளம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னக்கிளி மற்றும் வாமதேவி தம்பதியரின் மருமகனும் சித்திராவின் கணவரும் டிலக்ஷன், பார்த்தீபன், சிவறூபன், கஜரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நவரத்தினம், கமலேந்திரராசா மற்றும் செல்வராணி, புஷ்பராணி, ரஞ்சீத்குமார், விஜயராணி, மல்லிகாதேவி, ராகினி, உதயகுமாரி, பிரேம்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இந்திராகாந்தி, ராஜினி, சிறிதரன், வனஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்மிக்கவிடம்...

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழுள்ள விடயதானங்கள் பலவற்றை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் சென்றிருந்த பஸில் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக்க பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவருக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டிருந்தது.

நாட்டை இந்த நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான எந்தத் திட்டமும் ரணில் விக்கிரமசிங்கவிடம் இல்லை என்றும், அதனால் அவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் அமைச்சர் தம்மிக்க பெரேரா முன்னர் விமர்சித்திருந்தார். (அ-எ-இ)

## வருகின்றன...

வரவுள்ளன என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

டீசல் தாங்கிக் கப்பல்களில் தலா 40 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலும், 35 ஆயிரம் மெற்றிக்தொன் ஒக்டேன் 92 ரக பெற்றோலுடன் ஒரு கப்பலும் இலங்கைக்கு வரவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## நாடாளுமன்ற...

தால் இன்று நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறாது. எனினும் நாளை சனிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நேற்றிரவு அறிய முடிந்தது.

கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாய ராஜபக்ச விலகுவார் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து இன்று நாடாளுமன்றம் கூடும் என்றும் எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கான வேட்புமனுக்கள் ஏற்கப்படும் என்றும், 20ஆம் திகதி ஜனாதிபதி தெரிவு நடைபெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் கோத்தாபய ராஜபக்ச நேற்றே தனது பதவி விலகல் கடிதத்தை மின்னஞ்சல் மூலம் சபாநாயகருக்கு அனுப்பியிருந்தார். அதனால் இன்று நாடாளுமன்றம் கூடுவது தடைப்பட்டுள்ளது.

ஆயினும் நாளை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் திட்டமிட்டபடி, எதிர்வரும் 19ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுக்கள் பெறப்பட்டு, 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் என்று அறிய முடிகின்றது.

(அ-எ-இ)

## பதவி விலகினார்...

ஜனாதிபதியின் பதவி விலகல் கடிதம் கிடைத்ததை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உறுதிப்படுத்தியதுடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நேற்றிரவு தெரியப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் இருந்து வெளியேறி மாலைதீவில் தங்கியிருந்த கோத்தாபய ராஜபக்ச, நேற்று மாலை சிங்கப்பூர் சென்றடைந்த நிலையில், அவரது பதவி விலகல் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் மூலப் பிரதியை சிங்கப்பூரிலிருந்து துரித கதியில் கிடைக்கக்கூடிய வகையில், விமானமொன்றில் கொழும்புக்கு இராஜதந்திரி ஒருவர் கொண்டு வருவார் என அறியமுடிகின்றது. சிங்கப்பூரிலுள்ள இலங்கைத்தூதரகம் இந்தக் கடிதத்தை ஜனாதிபதியிடமிருந்து பெற்று உடனடியாக கொழும்புக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் பதவி விலகுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அது இழுத்தடிக்கப்பட்டு வந்தது. பாதுகாப்பான இடம் ஒன்றை அடைந்தவுடன் அவரது பதவி விலகல் கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று கூறப்பட்ட நிலையில், அவரது பதவி விலகல் கடிதம் நேற்று மாலைதான், மின்னஞ்சல் வழியே சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மூலப் பிரதி கிடைத்த பின்னர் கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை சபாநாயகர் இன்று வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## ரயிலுடன்...

காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியே இவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-125)

## தப்பியோடிய...

சாங்கி விமான நிலையத்தில் கோத்தாபய ராஜபக்ச மற்றும் முதல் பெண்மணி அயோமா நிற்கும் ஒளிப்படம் ஒன்று விமான நிலையத்தில் இருந்த பயணி ஒருவரால் வெளியிடப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்சவின் வருகை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு, தனிப்பட்ட பயணமாகவே கோத்தாபய ராஜபக்ச நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

மாலைதீவில் இருந்து சவூதி அரேபிய ஜெட் விமானம் ஒன்றில் சிங்கப்பூர் நோக்கிப் பயணித்த கோத்தாபய ராஜபக்சவை, மாலைதீவின் சபாநாயகர் முகமட் நசீட் விமான நிலையம் வரை சென்று வழியனுப்பி வைத்துள்ளார். இவரே கோத்தாபய ராஜபக்ச மாலைதீவில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருந்தார்.

கோத்தாபய [illegible] மாலைதீ[illegible] முன்னெடுக்கப்பட்ட நிலையில், மாலைதீவின் பிரமுகர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் அதிகாரிகளின் கண்காணிப்புடன், கோத்தாபய ராஜபக்சவும், அவரது மனைவியும் இரு மெய்ப்பாதுகாவலர்களும் விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கோத்தாபய ராஜபக்சவின் வருகை தொடர்பாக சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள தகவலில், கோத்தாபய ராஜபக்ச தனிப்பட்ட பயணமாகவே வருகின்றார் என்றும், அவர் அரசியல் தஞ்சக் கோரிக்கை எதுவும் விடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## வன்முறையைத்...

யோசிக்கப்படும் என்று சிறிலங்கா இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் அமைதி நிலைமை பேணப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டுள்ளமையாலும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுப்படுத்த வேண்டும் என்பதாலும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலும், வன்முறையைத் தூண்டும் வகையிலும் செயற்படுதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் அமைதியை நிலைநாட்டுவதற்காக பாதுகாப்புப் படையினர் முழுமையான அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டி ஏற்படும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-22)

## பொருளாதார...

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின், கேரள மாநிலத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையின் நிலைவரம் உணர்வுபூர்வமானதாகவும், குழப்பகரமானதாகவும் காணப்படுகின்றது. நாம் இங்கு பேசிக் கொண்டிருக்கும் தருணத்தில்கூட அங்கு நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இலங்கை மக்கள் எங்கள் அயலவர்கள். நாங்கள் அவர்களுக்கு உதவுவதில் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். அவர்கள் மிகவும் நட்புணர்வு மிக்கவர்கள். கடந்த சில மாதங்களாக அந்த நாட்டுக்கு நாம் மிகுந்த ஆதரவாக இருந்துள்ளோம். எங்கள் கவனம் இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பாகவும், அதற்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பாகவுமே இருக்கின்றது. நாங்கள் ஏனைய விடயங்களில் ஈடுபடவில்லை. சமூக ஊடகங்களில் வெளியாகும் அனைத்துக்கும் நாங்கள் பதிலளிக்க முடியாது - என்றார். (அ-எ-இ)

## புதிய பிரதமர்...

அறிவித்துள்ள நிலையில், அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு “[illegible]ற்கு எதிரணிகள் தீர்மானித்துள்ளன என்று அறியமுடிகின்றது.

மக்களின் தீவிர எதிர்ப்பால் நாட்டில் இருந்து வெளியேறிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதில் ஜனாதிபதியாக நியமித்திருந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், பதில் ஜனாதிபதியாக ரணில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டால், அதைக் கொண்டு ரணிலைப் பதவியில் அகற்றுவதற்கான முயற்சிகளை எதிரணிகள் ஆரம்பித்துள்ளன. புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டால், அவரே பதில் ஜனாதிபதி பதவியை வகிக்கத் தகுதியானவர் என்ற வாதத்தை நாடாளுமன்றத்தில் எதிரணிகள் முன்வைக்கவுள்ளன என்று அறிய முடிகின்றது.

இந்த முயற்சியால் ரணிலைப் பதவியில் இருந்து விலக்குவது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பது தெரியவில்லை என்று கூறும் கொழும்புத் தகவல்கள், இருந்தபோதும் அவ்வாறான ஒரு முயற்சியை மேற்கொள்ள எதிரணிகள் தீர்மானித்துள்ளன என்றும் தெரிவித்தன. (அ-எ-இ)

## கோத்தாவை...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ள கோத்தாபய ராஜபக்ச ஒரு இன அழிப்புப் படுகொலையாளி, போர்க்குற்றவாளி எனப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இராணுவத்தினரிடமே ஒப்படைத்துள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. அந்தக் காலகட்டத்தில் கோத்தாபய ராஜபக்சவே பாதுகாப்புச் செயலராக இருந்தார்.

கோத்ததாபய ராஜபக்ச மற்றும் அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் போரின்போதும், போரின் பின்னரும் தமிழ் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். கோத்தாபய ராஜபக்ச மற்றும் ராஜபக்சக்களின் பெயரில் சர்வதேச ரீதியாக உள்ள சொத்துக்களை முடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளின் நீதிமன்றங்கள் பலவற்றில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும். ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தால் கோத்தாபய ராஜபக்ச மீது நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடர வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் அரசியல் கைதிகளை விடுவிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும். படையினரால் பறிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெற்செய்கைக்கான விதை நெல் வழங்க நடவடிக்கை

## விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

**யாழ்ப்பாணம், ஜுலை 15**

**இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை கிட்டத்தட்ட 12 ஆயிரத்து 800 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பெரும்போக நெற்செய்கைக்கு விவசாயிகள் சிலர் ஏற்கனவே விவசாய நிலங்களை உழுது சீர்செய்துள்ளனர்.

எனினும் தற்போது நாட்டின் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டால் வயல் நிலங்களை உழுவதற்கு இயந்திரங்களுக்கு டீசல் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அத்துடன் இம்முறை பெரும்போக நெற்செய்கையின் போது விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்களுக்கான விதை நெல்லைப் பெற்றுக்கொடுக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய கடந்த ஜூன் மாதம் மட்டும் ஆயிரத்து 300 வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். நல்லூர் பிரதேசத்தில் 737 வளர்ப்பு நாய்களுக்கும் வண்ணார்பண்ணை பிரதேசத்தில் 569 வளர்ப்பு நாய்களுக்கும் விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது.

இதேவேளை அரியாலைப் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் நாளையுடன் நிறைவுபெறும். அத்துடன் கொழும்புத்துறைப் பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-14-17)

# துணுக்காய் வலய பாடசாலைகளுக்கு முல்லை அதிபர்களை நியமியுங்கள்

## பெற்றோர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜுலை 15

துணுக்காய் கல்வி வலயத்தில் அதிபர் இல்லாத பாடசாலைகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிபர் தரத்துடன் உள்ளவர்களை நியமியுங்கள் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயத்தில் அதிபர் இல்லாத பாடசாலைகளுக்கு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் அதிபர்கள் நியமிக்கப்படுகின்றனர். எனினும் அவர்கள் எரிபொருள் நெருக்கடி மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லாமை ஆகியவற்றை சுட்டிக்காட்டி பணியைப் பொறுப்பேற்பதில்லை. ஆகவே முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிபர் தரத்துடன் உள்ளவர்களை அதிபர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கவேண்டும். அதேவேளை முல்லைத்தீவு, முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய அதிபர் கடந்த ஜனவரி மாதம் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். ஆயினும் இதுவரை புதிய அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளே கேள்விக்குறியாகுகின்றன என பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ச-13)

# பூநகரிப் பிரதேசசபையின் சேவைகள் எரிபொருளின்றி முடங்கும் அபாயம்

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சபைத் தவிசாளர் கடிதம்

கிளிநொச்சி, ஜுலை 15

பூநகரி பிரதேசசபையால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய சேவைகள் எரிபொருளின்றி முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என பூநகரி பிரதேசசபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

> **மக்களின் அன்றாட குடிதண்ணீர் விநியோகம், கழிவகற்றல் செயற்பாடுகள் ஆகியவை இதனால் பாதிக்கப்படும். இதன்காரணமாக ஏற்படும் விளைவுகளுக்கு சபையால் பொறுப்புக்கூற முடியாததாக அமையும்.**

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

பூநகரி பிரதேசத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பூநகரி, முழங்காவில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாக சபைக்குத் தேவையான எரிபொருள்கள் பெறப்பட்டன. எனினும் கடந்த இரு வார காலமாக சபைக்குரிய எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் தற்போது சபையின் வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட சேவையையே வழங்கிவருகின்றன.

இந்த நிலை மேலும் நீடித்தால் எதிர்வரும் நாள்களில் அனைத்து சேவைகளும் முற்றாக நிறுத்தப்படும் அபாயம் ஏற்படும்.

மக்களின் அன்றாட குடிதண்ணீர் விநியோகம், கழிவகற்றல் செயற்பாடுகள் ஆகியவை இதனால் பாதிக்கப்படும். இதன்காரணமாக ஏற்படும் விளைவுகளுக்கு சபையால் பொறுப்புக்கூற முடியாததாக அமையும்.

இதுதொடர்பில் தெளிவுபடுத்தி பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எமது சபையின் செயற்பாடுகள் மக்களின் அத்தியாவசிய சேவையுடன் இணைந்த ஒன்றாகும். எனவே சபை மக்களுக்குரிய சேவையை வழங்க எமக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்க வேண்டும். அத்துடன் அடிக்கடி நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுகின்றமையால் மக்களுக்கு சேவையை வழங்க எரிபொருளை தாங்கிகளில் சேகரித்து நாளாந்த சேவைக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (ச-13)

**சமையல் உதவியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு சமையல் உதவியாளர் ஒருவர் தேவை.
வயது 25 – 35 விரும்பத்தக்கது. (CS 19978)(3/6)

076 816 2331, 021 221 4602

**காணி, வீடு விற்பனை மற்றும் கொள்முதல்**

காணிகள் / வீடுகள் இன்றைய சந்தை பெறுமதிக்கு ஏற்ப விற்பனை மற்றும் கொள்முதல் செய்து தரப்பட்டும். (CS 19973)(3/6)

Real Estates 077 839 5849

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் றொலெக்ஸ் உணவகத்திற்கு பின்வரும் வேலை ஆட்கள் இருபாலாரும் தேவை.

1. கணக்காளர்
2. பார்சல் கட்டுபவர்கள்
3. உணவு பரிமாறுபவர்கள்
4. துப்புரவு பணியாளர்கள்

077 846 1024

## கிளை இலக்கம் குறிப்பிடப்படாமையால்

# பொருள்கள் கொள்வனவு செய்வதில் மக்கள் சிரமம்

சாவகச்சேரி, ஜுலை 15

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப்பரப்பில் உள்ள குடும்பங்களுக்கு கிராம அலுவலர்களால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டையில் பொருள்கள் பெறும் கிளைக்கடையின் இலக்கம் அல்லது பெயர் குறிப்பிடப்படவில்லை. இதனால் எந்தக் கிளையில் பொருள்கள் கொள்வனவு செய்வதென்று தெரியாமல் மக்கள் அலைந்து சிரமப்படுகின்றனர்.

முதற்கட்டமாகத் தற்போது சங்கக் கிளைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறுகின்றது. பங்கீட்டு அட்டையில் இலக்கம் குறிப்பிடாத மக்கள் மண்ணெண்ணெய்யை எந்தக் கிளைகளில் பெறுவதென்று தெரியாமல் அலைகின்றனர்.

இது தொடர்பாக சங்கத்துடன் தொடர்புகொண்டபோது பங்கீட்டு அட்டையில் பொருள்கள் பெறும் கிளையின் இலக்கம் குறிப்பிடப்படாமல் உள்ளதால் பொருள்களை ஒதுக்கீடு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம்.

முன்னைய காலத்தில் கிளையின் இலக்கம் குறிப்பிட்டு வழங்கப்பட்டதால் பங்கீட்டு அட்டையின் அடிப்படையில் பொருள்களை கிளைகளுக்கு வழங்கி வந்தோம். தற்போது வழங்கப்பட்ட அட்டையில் கிளையின் இலக்கம் கிராம அலுவலர்களால் குறிப்பிடப்படவில்லை. இதனால் மக்கள் தங்களது கிளைகளில் மண்ணெண்ணெய் பெறாமல் வேறு கிளைகளில் கொள்வனவு செய்வதால் அந்தக் கிளைக்குட்பட்ட பகுதி மக்கள் மண்ணெண்ணெய் பெறமுடியாத நிலை ஏற்படுகின்றது எனத் தெரிவித்தனர்.

இதேவேளை சங்க எல்லைப்பரப்பில் உள்ள 23 கிளைகளில் 10 கிளைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் கிளை இலக்கம் குறிப்பிடாமல் பங்கீட்டு அட்டைகளை விநியோகம் செய்துள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org